12. யங் இரட்டைப் பிளவு ஆய்வில், இரண்டு ஓரியல் மூலங்களுக்கு இடைப்பட்ட தொலைவு 0.90 mm மற்றும் பிளவுகளுக்கும் திரைக்கும் இடைப்பட்ட தொலைவு 1m என உள்ளது. மையப் பொலிவுப் பட்டையிலிருந்து 1 mm தொலைவில் இரண்டாவது கருமைப் பட்டை பெறப்படுகிறது எனில் பயன்படுத்தப்படும் ஒற்றை நிற ஒளியின் அலைநீளம்?

a) $60 \times 10^{-4}$ cm b) $10 \times 10^{-4}$ cm c) $10 \times 10^{-5}$ cm d) $6 \times 10^{-5}$ cm



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. யங் இரட்டைப்பிளவு ஆய்வில், பெறப்பட்ட பட்டைகளின் தடிமன் 0.4mm என உள்ளது. இந்த முழு அமைப்பும் எவ்வித மாற்றமும் செய்யாமல் ஒளிவிலகல் எண் 4/3 கொண்ட தண்ணீரில் வைக்கப்படும் போது பெறப்படும் புதிய பட்டைகளின் தடிமன்?

a) 0.30 mm　　b) 0.40 mm　　c) 0.53 mm　　d) 450 $\mu m$

14. $y = A\sin(kx - wt)$ என்ற சமன்பாடு ஒளி அலையைக் குறிப்பதாகக் கொண்டால், y என்பது குறிப்பது

a) ஈதர் துகள்களின் இயக்கத்தை　　b) ஊடகத்தின் அழுத்தத்தை

c) ஊடகத்தின் அடர்த்தியை　　d) மின்புலத்தை

15. ஒளி அலையானது குறுக்கலைகள் தான் என உறுதிப்படுத்தும் அலையின் பண்பு?

a) எதிரொளித்தல்　　b) குறுக்கீட்டு விளைவு

c) விளிம்பு விளைவு　　d) தளவிளைவு

16. ஒளியானது ஒளிவிலகல் அடையும் போது மாறாதது?

a) அலைநீளம்　　b) அதிர்வெண்　　c) திசைவேகம்　　d) வீச்சு

17. யங் இரட்டைப் பிளவு ஆய்வில் வெள்ளை ஒளி பயன்படுத்தப்படும் போது

a) மையப்பட்டை வெள்ளையாக இருக்கும்　　b) மையப்பட்டை கருமையாக இருக்கும்

c) மையப்பட்டை வண்ணங்களாக இருக்கும்　　d) மையப்பட்டை ஊதா நிறமாக இருக்கும்

18. இரண்டு ஓரியல் மூலங்களில் ஒளிச்செறிவுகளின் விகிதம் 25:16 எனில் அவை குறுக்கீடு அடைந்த பிறகு கிடைக்கும் பெரும மற்றும் சிறும ஒளிச்செறிவுகளின் விகிதம்?

a) 1: 81　　b) 81:1　　c) 5:4　　d) 4:5

19. யங் இரட்டைப்பிளவு ஆய்வில், ஒரு புள்ளியில் பெறப்பட்ட ஒளிச்செறிவானது பெரும ஒளிச் செறிவில் ¼ பங்காக அமைகிறது எனில் அப்புள்ளியின் கோண நிலை?

a) $\sin^{-1}\left(\frac{\lambda}{d}\right)$　　b) $\sin^{-1}\left(\frac{\lambda}{2d}\right)$　　c) $\sin^{-1}\left(\frac{\lambda}{3d}\right)$　　d) $\sin^{-1}\left(\frac{\lambda}{4d}\right)$

20. எதிரொளிப்பு நுண்ணோக்கி ஒன்றின் பகுதிறன் அதிகரிப்பது

a) படுகதிரின் அலைநீளம் குறைவாக உள்ள போது

b) படுகதிரின் அலைநீளம் அதிகரிக்கும் போது

c) பொருளருகு லென்சின் விட்டம் அதிகரிக்கும் போது

d) மேற்கண்ட ஏதுமில்லை

21. தொலைநோக்கியின் பகுதிறனை அதிகரிக்க, கீழ்க்காணும் எவற்றை அதிகரிக்க வேண்டும்?

a) அலைநீளம்

b) பொருளருகு வில்லையின் விட்டம்

c) கண்ணருகு வில்லையின் விட்டம்

d) கண்ணருகு வில்லையின் குவியத் தொலைவு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22. ஒற்றைப் பிளவு விளம்பு வளைவில் ஏற்படும் முதன்மை பெரும ஒளிச்செறிவு $I_0$ எனில் பிளவையின் அகலத்தை இரு மடங்காக்கும் பொழுது பெறப்படும் ஒளிச்செறிவு?

a) $2I_0$ b) $4I_0$ c) $I_0$ d) $I_0/2$

23. கருப்பு காகிதத்தாள் ஒன்றில், இரண்டு வெள்ளை ஒளிப்புள்ளிகள் 1 mm தொலைவில் உள்ளன. இப்புள்ளிகளை 3 mm விட்டம் கொண்ட கண்விழியின் மூலம் காணும் போது பிரித்தறியப்படும் பெருமத் தொலைவு?

(ஒளியின் அலைநீளம் 500 nm என்க).

a) 5 m b) 1 m c) 6 m d) 3 m

24. ஒளியியல் கருவி ஒன்றில் பயன்படுத்தப்படும் ஒளியின் அலைநீளங்கள் முறையே $\lambda_1 = 4000A^0$ மற்றும் $\lambda_2 = 5000A^0$ எனில் அக்கருவியின் பகுதிறன்களின் விகிதம்?

a) 16 : 25 b) 9 : 1 c) 4 : 5 d) 5 : 4.

25. $I_0$ ஒளிச்செறிவு கொண்ட தளவிளைவற்ற ஒளியானது தளவிளைவு ஆக்கியின் மீது படும்பொழுது ஊடுருவாத கதிரின் ஒளிச்செறிவு?

a) $\frac{I_0}{2}$ b) $\frac{I_0}{4}$ c) சுழி d) $I_0$

26. காற்றில் இருந்து கண்ணாடிக்குள் எதிரொளிக்கப்படும் ஒளியானது முற்றிலும் தளவிளைவுற்ற ஒளியாக அமைய வேண்டும் எனில் அதன் படுகோணத்தின் மதிப்பு?

a) $\sin^{-1}\mu$ b) $\sin^{-1}\left(\frac{1}{\mu}\right)$ c) $\tan^{-1}\left(\frac{1}{\mu}\right)$ d) $\tan^{-1}(\mu)$

27. $6000A^0$ அலைநீளம் கொண்ட ஒளியானது ஒற்றை பிளவை ஒன்றினால் ஒளியூட்டம் செய்யப்படுகிறது. பிளவைக்கும், திரைக்கும் இடைப்பட்ட தொலைவு 50 cm எனவும் முதல் மற்றும் மூன்றாவது சிறும விளிம்பு விளைவு பட்டைகளுக்கு இடைப்பட்ட தொலைவு 3.0 mm எனவும் உள்ள போது பிளவையின் தடிமன்?

a) $1 \times 10^{-4}$ m b) $2 \times 10^{-4}$ m c) $0.5 \times 10^{-4}$ m d) $4 \times 10^{-4}$ m

28. ஒற்றைப் பிளவை விளிம்பு விளைவு சோதனையில், பிளவையின் அகலம் அதன் ஆரம்ப அகலத்தை விட இரண்டு மடங்காக்கப்படுகிறது எனில் மைய விளிம்பு விளைவு பட்டையானது,

a) குறுகலாகும் மற்றும் மங்கலாகும் b) குறுகலாகும் மற்றும் பொலிவாகும்

c) அகலமாகும் மற்றும் மங்கலாகும் d) அகலமாகும் மற்றும் பொலிவாகும்

29. புருஸ்டர் கோணம் $(i_b)$ என்பது

a) $45^0 < i_b < 90^0$ b) $i_b = 90^0$ c) $0^0 < i_b < 30^0$ d) $30^0 < i_b < 45^0$

30. வேகமாக இயங்கும் எலக்ட்ரான்கள் இணைக்கற்றையாக பிளவை ஒன்றின் மீது செங்குத்தாக விழுகிறது. ஒளிரும் திரை ஒன்று பிளவையில் இருந்து அதிகத் தொலைவில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வைக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரானின் வேகத்தை அதிகரிக்கும் போது கீழ்க்கண்ட கூற்றுக்களில் சரியானது?

a) மையப்பொலிவின் கோண அகலம் குறைகிறது

b) மையப்பொலிவின் கோண அகலம் மாறாது

c) எலக்ட்ரான் கற்றைகளுக்கு திரையில் விளிம்பு பட்டை தோன்றுவதில்லை

d) விளிம்பு விளைவு பட்டையின் மையப்பொலிவின் கோண அகலம் அதிகரிக்கும்.

31. $\lambda$ அலைநீளம் கொண்ட இணைக்கற்றைகள் பிளவை ஒன்றின் மீது செங்குத்தாக விழுகின்றது. படுகதிருக்கு செங்குத்து திசையில் விளிம்பு விளைவு பட்டை பெறப்படுகிறது. விளிம்பு விளைவு பட்டையின் இரண்டாவது சிறுமத்திற்கு, இரண்டு பிளவைகளின் விளிம்புகளில் இருந்து பெறப்படும் அலைகளின் கட்ட வேறுபாடு?

a) $2\pi$ b) $3\pi$ c) $4\pi$ d) $\pi\lambda$

32. 10 cm விட்டமுடைய தொலைநோக்கி ஒன்றின் வழியே 5000 $A^0$ அலைநீளம் கொண்ட ஒளியினால் பெறப்படும் கோண பிரிதிறன்?

a) $10^6$ rad b) $10^{-2}$ rad c) $10^{-4}$ rad d) $10^{-6}$ rad

33. 10 cm விட்டம் உள்ள பொருளருகு லென்சைக் கொண்டுள்ள தொலைநோக்கி ஒன்று, இரண்டு பொருட்களில் இருந்து 1 km தொலைவில் உள்ளது. 5000 $A^0$ அலைநீளம் கொண்ட ஒளியைக் கொண்டு இரண்டு பொருட்களையும் பகுத்தறியும் பொழுது பெறப்படும் இரண்டு பொருட்களுக்கு இடைப்பட்ட மீச்சிறு தொலைவு?

a) 0.5 mm b) 0.6 mm c) 6 mm d) 5 mm

34. 2 mm விட்டம் கொண்ட கண் விழியின் மூலம் 50 m தொலைவில் உள்ள இரண்டு புள்ளிகளை பிரித்தறிய அப்புள்ளிகளுக்கு இடைப்பட்ட மீச்சிறு தொலைவு? (பயன்படுத்தப்படும் ஒளியின் அலைநீளம் 5000 $A^0$)

a) 2.32 m b) 4.28 mm c) 1.25 cm d) 12.48 cm

35. 5000 $A^0$ அலைநீளம் கொண்ட ஒற்றை நிற இணைக்கற்றையானது ஒற்றைப் பிளவையின் மீது குத்தாக விழுகிறது. பிளவையின் தடிமன் 0.001 mm ஒளியானது குவிலென்சு மூலம் திரையில் குவியதளத்தில் குவிக்கப்படுகிறது. முதல் சிறும வரிசைக்கு ஏற்படும் விளிம்பு விளைவுக் கோணம்?

a) $0^0$ b) $15^0$ c) $30^0$ d) $50^0$

36. $\mu$ ஒளி விலகல் எண் கொண்ட சமதளப் பரப்பின் மீது தளவிளைவுறாத ஒளி ஒன்று காற்று ஊடகத்தில் இருந்து விழுகிறது. குறிப்பிட்ட படுகோண மதிப்பு (i)க்கு விலகல் அடைந்த மற்றும் எதிரொளித்த கதிர்கள் ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ளது எனில் கீழ்க்கண்ட நிபந்தனைகளில் சரியானது?

a) எதிரொளித்த கதிர் தளவிளைவுற்றதாகவும் மின்புல வெக்டர் படுதளத்திற்கு இணையாகவும் இருக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



b) எதிரொளித்த கதிர் தளவிளைவுற்றதாகவும், மின்புல வெக்டர் படுதளத்திற்கு செங்குத்தாகவும் இருக்கும்.

c) $i = \sin^{-1}\left(\frac{1}{\mu}\right)$

d) $i = \tan^{-1}\left(\frac{1}{\mu}\right)$

37. $P_1$ மற்றும் $P_2$ என்ற இரண்டு தளவிளைவு ஆக்கிகள் அதன் அச்சைப் பொருத்து ஒன்றுக்கொன்று செங்குத்தாக வைக்கப்பட்டுள்ளன. தளவிளைவற்ற ஒளி $I_0$ ஆனது $P_1$ மீது படுகிறது. மூன்றாவது தளவிளைவாக்கி $P_3$ ஆனது $P_1$ உடன் $45^0$ கோணத்தில் அமையுமாறு $P_1$ மற்றும் $P_2$க்கு இடையே வைக்கப்படுகிறது. $P_2$ வழியே ஊடுருவிச் செல்லும் கதிரின் செறிவு?

a) $\frac{I_0}{4}$ b) $\frac{I_0}{8}$ c) $\frac{I_0}{16}$ d) $\frac{I_0}{2}$

38. பின்வருவனவற்றுள் ஒற்றை நிற ஒளியைத் தரும் ஒளிமூலம்?

a) மெழுகுவர்த்தி b) மின்பல்பு c) பாதரசவிளக்கு d) லேசர்

39. ஒளிச்செறிவின் எதிர்த்தகவு இருமடி விதிக்கு உட்படுவது $\left(I \propto \frac{1}{r^2}\right)$

a) புள்ளி ஒளிமூலம் b) கோட்டு ஒளிமூலம் c) சமதள ஒளிமூலம் d) கோளக ஒளிமூலம்

40. இரண்டு ஒளிமூலங்கள் ஓரியல் மூலங்கள் எனில் அவை,

a) சம அலைநீளம் கொண்டவை

b) சம திசைவேகம் கொண்டவை

c) சம வடிவம் கொண்ட அலைமுகப்பை பெற்றவை

d) மாறாத கட்ட வேறுபாடு உடையவை

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | D | 4 | D | 5 | D |
| 6 | B | 7 | C | 8 | A | 9 | C | 10 | C |
| 11 | C | 12 | D | 13 | A | 14 | D | 15 | D |
| 16 | B | 17 | A | 18 | B | 19 | C | 20 | A |
| 21 | B | 22 | C | 23 | A | 24 | D | 25 | A |
| 26 | D | 27 | B | 28 | B | 29 | A | 30 | A |
| 31 | C | 32 | C | 33 | C | 34 | C | 35 | C |
| 36 | B | 37 | B | 38 | D | 39 | A | 40 | D |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# விளக்கங்கள்

1. a) 6.0 mm

$$\beta = \frac{D\lambda}{d} = \frac{1.0\times600\times10^{-9}}{0.10\times10^{-3}} = 6.0\times10^{-3}m = 6.0\,mm$$

2. c) மாறாது
3. d) ஸ்நெல் விதியை விளக்க
4. d) மாறாத கட்ட வேறுபாட்டை கொண்டவை
5. d) 3.00

$$\mu = \frac{C}{V} \qquad \therefore V = \nu\lambda = 2 \times 10^{14} \times 5000 \times 10^{-10}$$

$$\therefore \mu = \frac{3\times10^{8}}{10^{8}} \qquad V = 10^{8}\ m/s$$

$$\mu = 3$$

6. b) $\frac{\mu t}{C}$

$$\text{காலம்} = \frac{\text{இடப் பெயர்ச்சி}}{\text{திசைவேகம்}} = \frac{t}{v} = \frac{t}{\frac{C}{\mu}} = \frac{\mu t}{C}$$

7. c) குறையும் $\lambda' = \frac{\lambda}{\mu}$
8. a) 2:1

$$\frac{I_1}{I_2} = \frac{a^2}{b^2} = \frac{4}{1}$$

$$\therefore \frac{a}{b} = \frac{2}{1}$$

9. c) நான்கு மடங்காகும்

$$\beta = \frac{D\lambda}{d}$$

$d' = \frac{d}{2}$ மற்றும் $D' = 2D$ எனில்

$$\beta' = \frac{2D\lambda}{\left(\frac{d}{2}\right)} = 4\left(\frac{D\lambda}{d}\right) = 4\beta$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. c) $\frac{9\lambda}{2}$

ஆரம்ப கட்ட வேறுபாடு $\delta = 0$

கட்ட வேறுபாடு $= \frac{2\pi}{\lambda}$. பாதை வேறுபாடு

$\delta' = \frac{2\pi}{\lambda} . \Delta x$

$\therefore \Delta x = \frac{\lambda}{2\pi} . \delta'$

ஐந்தாவது சிறுமத்தில் (n = 4)

$\delta' = (8+1)\pi = 9\pi$

பாதை வேறுபாடு, $\Delta x = \frac{\lambda}{2\pi} . 9\pi = \frac{9\lambda}{2}$

11. c) 1.78

ஊடகத்தில், 8வது பொலிவுப்பட்டையின் நிலை, $x = \frac{8\lambda mD}{d}$

காற்றில், 5வது கருமைப்பட்டையின் நிலை,

$$x' = \frac{\left(5 - \frac{1}{2}\right)\lambda_a D}{d} = \frac{4.5\lambda_a D}{d}$$

$x = x^1$

$$\frac{8\lambda m D}{d} = \frac{4.5\lambda_a D}{d}$$

$$8\lambda_m = 4.5\lambda_a \quad \Rightarrow \quad \frac{\lambda_a}{\lambda_m} = \frac{8}{4.5}$$

$$\mu_m = \frac{\lambda_a}{\lambda_m} = \frac{8}{4.5} = 1.78$$

12. d) 6 x $10^{-5}$ cm

கருமை வரிக்கு, $x = (2n-1)\frac{\lambda D}{2d}$

$$\therefore \lambda = \frac{2xd}{(2n-1)D}$$

$$\lambda = \frac{2 \times 10^{-3} \times 0.9 \times 10^{-3}}{(2 \times 2 - 1) \times 1}$$

$$\lambda = 0.6 \times 10^{-6} m = 6 \times 10^{-5}\ cm$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. a) 0.3 mm

$$\beta' = \frac{\beta}{\mu} = \frac{0.4}{4/3} = 0.3mm$$

14. d) மின்புலத்தை
15. d) தளவிளைவு
16. b) அதிர்வெண்
17. a) மையப்பட்டை வெள்ளையாக இருக்கும்
18. b) 81:1

வீச்சின் தகவு, $r = \sqrt{\frac{I_1}{I_2}} = \sqrt{\frac{25}{16}} = \frac{5}{4}$

$$\frac{I_{\text{பெருமம்}}}{I_{\text{சிறுமம்}}} = \frac{(r+1)^2}{(r-1)^2} = \frac{\left(\frac{5}{4}+1\right)^2}{\left(\frac{5}{4}-1\right)^2} = \frac{81}{1}$$

$I_{\text{பெ}} : I_{\text{சிறு}} = 81 : 1$

19. c) $\text{Sin}^{-1}\left(\frac{\lambda}{3d}\right)$




$$I = I_{\text{பெருமம்}} \cos^2\left(\frac{\phi}{2}\right)$$

$$\frac{I_{\text{பெ}}}{4} = I_{\text{பெ}} \cos^2\left(\frac{\phi}{2}\right)$$

$\cos\frac{\phi}{2} = \frac{1}{2}$ (அல்லது) $\frac{\phi}{2} = \frac{\pi}{3}$ (அல்லது) $\phi = \frac{2\pi}{3}$

கட்ட வேறுபாடு $\phi = \frac{2\pi}{\lambda}.\delta$

இங்கு, $\phi = \frac{2\pi}{3}, \delta = \frac{\lambda}{3}$ எனப் பிரதியிட

பாதை வேறுபாடு $\delta = d\sin\theta$

$$d \sin\theta = \frac{\lambda}{3}$$

$$\sin\theta = \frac{\lambda}{3d}$$

$$\theta = \sin^{-1}\left(\frac{\lambda}{3d}\right)$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



20. a) படுகதிரின் அலைநீளம் குறைவாக உள்ள போது நுண்ணோக்கியின் பகுதிறன் $= \frac{2\mu \sin\theta}{\lambda}$

21. b) பொருளருகு வில்லையின் விட்டம்

தொலைநோக்கியின் பகுதிறன் $= \frac{D}{1.22\lambda}$

22. c) $I_0$ ஒற்றைப்பிளவு விளிம்பு விளைவில் பெறப்படும் முதன்மை பெரும ஒளிச்செறிவு (Principal Maximum) பிளவையின் அகலத்தை சார்ந்ததல்ல.

23. a) 5m

கண் விழியால் பிரித்தறியப்படும் எல்லை, $\theta = \frac{1.22\lambda}{a}$

புள்ளிகளுக்கு இடைப்பட்ட தொலைவு d எனவும், கண் விழியால் பிரித்தறியப்படும் தொலைவு y எனவும் கொண்டால் $\theta = \frac{d}{y}$

$$\therefore \frac{1.22\lambda}{a} = \frac{d}{y}$$

$$y = \frac{da}{1.22\lambda} = \frac{3\times10^{-3}\times1\times10^{-3}}{1.22\times500\times10^{-9}} = 4.92m$$

$$y \cong 5m$$

24. d) 5 : 4

பகுதிறன் $\propto \frac{1}{\text{அலைநீளம்}}$

$$\frac{RP_1}{RP_2} = \frac{\lambda_2}{\lambda_1} = \frac{5000}{4000} = 5:4$$

25. a) $\frac{I_0}{2}$

தளவிளைவு ஆக்கியின் வழியே ஊடுருவும் கதிரின் ஒளிச்செறிவு, $I = I_0 \cos^2\theta$

ஒரு முழுச் சுற்றுக்கான $\cos^2\theta$ வின்

சராசரி மதிப்பு $\frac{1}{2}$ ஆகும்.

$$I = I_0\left(\frac{1}{2}\right) = \frac{I_0}{2}$$

ஊடுருவாத கதிரின் ஒளிச்செறிவு, $I' = I_0 - \frac{I_0}{2}$; $I' = \frac{I_0}{2}$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26. d) $\tan^{-1}\mu$

புருஸ்டர் விதியிலிருந்து, $\mu = \tan i_p$

$i_p = tan^{-1}(\mu)$

27. b) $2 \times 10^{-4}$ m

n ஆவது சிறும விளிம்பு விளைவு பட்டைக்கு,

$$x_n = \frac{nD\lambda}{d}$$

$$x_3 - x_1 = (3-1)\frac{D\lambda}{d} = \frac{2D\lambda}{d}$$

$$d = \frac{2D\lambda}{x_3 - x_1} = \frac{2\times 0.50\times 6000\times 10^{-10}}{3\times 10^{-3}}$$

$$d = 2\times 10^{-4} m$$

28. b) குறுகலாகும் மற்றும் பொலிவாகும்

$$\theta \propto \frac{2\lambda}{a} \quad \text{மற்றும்} \quad I \propto \frac{1}{a^2}$$

a இருமடங்காகும் போது $\theta$ குறைந்து குறுகலடையும்

a இருமடங்காகும் பொழுது ஒளிச்செறிவு நான்கு மடங்காகி பொலிவாகும்.

29. a) $45^o < i_b < 90^o$

புருஸ்டர் கோணம் என்ற தளவிளைவுக் கோணம் $45^o$லிருந்து $90^o$க்குள் அமையும் போது படுகதிரானது முற்றிலும் தளவிளைவுற்ற ஒளியாக அமையும்.

30. a) மையப் பொலிவின் கோண அகலம் குறைகிறது.

31. c) $4\pi$

இரண்டாவது சிறுமத்திற்கு பாதை வேறுபாடு $= 2\lambda$

$$\Delta\phi = \frac{2\pi}{\lambda}\times \text{ பாதை வேறுபாடு}$$

$$\Delta\phi = \frac{2\pi}{\lambda}\times 2\lambda = 4\pi$$

32. c) $10^{-4}$ rad

படுதிறன், $R.P = \frac{1}{\Delta\theta}$

கோணப் பிரிதிறன், $\Delta\theta = \frac{1.22\lambda}{D}$

$$\Delta\theta = \frac{1.22\times 5000\times 10^{-8}}{0.1} = 6.1\times 10^{-4}$$

$$\Delta\theta = 10^{-4} \text{ rad}$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

33. c) 6mm




தொலைநோக்கியின் பகுதிறன்,

$$d\theta = \frac{1.22\lambda}{D} = \frac{1.22\times5000\times10^{-8}}{10}$$

$$x = d\theta.d = \frac{1.22\times5000\times10^{-8}\times10^{5}}{10}$$

$$= 6.1\times10^{-1}cm$$

$x$ = 6.1 mm

34. c) 1.25 cm




d = 2 mm = 2 x $10^{-1}$ cm

x = 5000 $A^o$ = 5000 x $10^{-8}$ cm

கண்ணின் பகுதிறன் $\frac{d}{\lambda} = \frac{2\times10^{-1}}{5000\times10^{-8}} = \frac{1}{d\theta}$

இருபுள்ளிகளுக்கு இடைப்பட்ட மீச்சிறு தொலைவு

$S = r\,d\theta$ r = 50 m = 5000 cm

$$= 5000\times\frac{5000\times10^{-8}}{2\times10^{-1}}$$

S = 1.25 cm

35. c) $30^o$

முதல் சிறுமத்திற்கு, n = 1 எனவே $a\sin\theta = n\lambda$

$a\sin\theta = \lambda$

$$\sin\theta = \frac{\lambda}{a} = \frac{5000\times10^{-10}}{0.001\times10^{-3}} = 0.5$$

$$\theta = \sin^{-1}(0.5) = 30^o$$

36. b) எதிரொளித்த கதிர் தளவிளைவுற்றதாகவும், மின்புல வெக்டர் படுதளத்திற்கு செங்குத்தாகவும் இருக்கும். எதிரொளித்த கதிர் மற்றும் விலகடைந்த கதிர் இரண்டும் ஒன்றுக்கொன்று செங்குத்து எனில் தளவிளைவுக் கோணம் ($i_p$)

37. b) $\frac{I_0}{8}$

$P_1$ வழியே ஊடுருவிச் செல்லும் ஒளியின் செறிவு

$$I_1 = \frac{I_o}{2}$$

$P_3$ வழியே ஊடுருவிச் செல்லும் ஒளியின் செறிவு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



$$I_2 = I_1 \cos^2 45^o = \frac{I_o}{2}\left(\frac{1}{\sqrt{2}}\right)^2 = \frac{I_o}{4}$$

$P_3$ மற்றும் $P_2$ க்கு இடைப்பட்ட கோணம் $= 90^0 - 45^0 = 45^0$

$P_2$ வழியே ஊடுருவிச் செல்லும் ஒளியின் செறிவு

$$I_3 = I_2 \cos^2 45^o = \frac{I_o}{4}\left(\frac{1}{\sqrt{2}}\right)^2 = \frac{I_0}{8}$$

38. d) லேசர்

ஒற்றைநிற ஓரியல் ஒளி

39. a) புள்ளி ஒளி மூலம்

40. d) மாறாத கட்ட வேறுபாடு உடையவை

ஓரியல் மூலங்கள் ஒரே கட்டத்தில் அமையும்.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# இயல் - 8

# கதிர்வீச்சு மற்றும் பருப்பொருளின் இருமைப்பண்பு

**பரப்பு அரண்**

உலோகத்தின் மேற்பரப்பிலிருந்து கட்டுறா எலக்ட்ரான்களை வெளியேற விடாமல் தடுக்கும் மின்னழுத்த அரண்.

**வெளியேற்று ஆற்றல்**

உலோகத்தின் பரப்பிலிருந்து எலக்ட்ரானை வெளியேற்றத் தேவைப்படும் சிறும ஆற்றல் ஒரு எலக்ட்ரான் வோல்ட்

1ev = எலக்ட்ரான் பெறும் இயக்க ஆற்றல்

= மின்புலத்தினால் எலக்ட்ரான் மீது செய்யப்படும் வேலை

$= qv = 1.602\times10^{-19}C\times1V = 1.602\times10^{-19}J$

**ஒளி மின்னோட்டத்தின் மீதான படுகதிர் செறிவின் விளைவு**

$\nu, V$ - மாறிலி

ஒளி மின்னோட்டம் $\propto$ படுகதிரின் செறிவு (I)

ஒளி மின்னோட்டத்தின் மீதான மின்னழுத்த வேறுபாட்டின் விளைவு




**நிறுத்து மின்னழுத்தம்**

பெரும இயக்க ஆற்றலைக் கொண்ட எலக்ட்ரான்களை நிறுத்தி ஒளி மின்னோட்டத்தை சுழியாக்குவதற்கு ஆனோடிற்கு அளிக்கப்படும் எதிர் மின்னழுத்தம்

$$K_{\text{பெரும}} = \frac{1}{2} m\, V^2_{\text{பெரும}} = eV_0$$

கொடுக்கப்பட்ட அதிர்வெண்ணிற்கு, நிறுத்து மின்னழுத்தமானது படுகதிரின் ஒளிச்செறிவினை பொருத்து அமையும்.

நிறுத்து மின்னழுத்தத்தின் மீதான படுகதிரின் அதிர்வெண் விளைவு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஒளி மின்விளைவிற்கான ஐன்ஸ்டீன் சமன்பாடு



$$hr = \phi_0 + \frac{1}{2}mv^2$$

$hr$ – படுகதிரின் ஆற்றல்

$\phi_0 - h\nu_0$ (வெளியேற்று ஆற்றல்)

$\frac{1}{2}mv^2$ – இயக்க ஆற்றல் (நிறை, திசைவேகம்)

**பருப்பொருளின் அலைப்பண்பு**

இயக்கத்தில் உள்ள பருப்பொருள் துகள்கள் அனைத்தும் அலைப்பண்பைப் பெற்றுள்ளன. இந்த அலைகள் டி பிராய் அலைகள் எனப்படும்.

டி பிராய் அலைநீளம் $\lambda = \frac{h}{P} = \frac{h}{mv}$

எலக்ட்ரானின் டி பிராய் அலை நீளம்

m நிறை கொண்ட எலக்ட்ரான் V வோல்ட் மின்னழுத்த வேறுபாட்டால் முடுக்கப்படும் பொழுது எலக்ட்ரானின் திசைவேகம் v ஆனது

$$\frac{1}{2}mv^2 = eV$$

$$\therefore V = \sqrt{\frac{2ev}{m}}$$

$$\therefore \lambda = \frac{h}{mv} = \frac{h}{m\sqrt{\frac{2ev}{m}}} = \frac{h}{\sqrt{2meV}} = \frac{12.27}{\sqrt{V}} A^0$$

www.Padasalai.Net

# வினாக்கள்

1. $V_0$ நிறுத்து மின்னழுத்தம் கொண்ட ஒளிமின்கலன் ஒளி மூலத்திலிருந்து 50cm தொலைவில் வைக்கப்பட்டுள்ளது. ஒளி மூலத்திற்கும் மின்கலனுக்கும் இடையிலான தொலைவு 25cm ஆகக் குறைக்கும் பொழுது புதிய நிறுத்து மின்னழுத்தமானது

   a) $V_0/2$ b)Vo c) 4Vo d) 2Vo

2. ஒளி மின் விளைவு நிகழ்வின் போது, 1.8eV வெளியேற்று ஆற்றல் கொண்ட உலோகப் பரப்பிலிருந்து வெளிப்படும் எலக்ட்ரானின் பெரும் இயக்க ஆற்றல் 0.5ev எனில் அதற்குரிய நிறுத்து மின்னழுத்தமானது

   a) 1.8 V b) 1.3 V c) 0.5 V d) 2.3 V



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. பயன் தொடக்க அதிர்வெண் $(\nu_0)$ஐ விட அதிகமான அதிர்வெண் $(\nu)$ உடைய கதிர் படும் பொழுது வெளிப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கையானது எதற்கு நேர்விகிதத்திலிருக்கும்
   a) பயன் தொடக்க அதிர்வெண் $(\nu_0)$  b) ஒளியின் செறிவு
   c) படுகதிரின் அதிர்வெண் $(\nu)$  d) $(\nu-\nu_0)$
4. உலோகத் தகட்டின் மீது புறஊதாக்கதிர் படும் பொழுது ஒளி மின் விளைவு நிகழ்வதில்லை. கீழே கொடுக்கப்பட்ட கதிர்களில் எக்கதிரின் மூலம் ஒளிமின் விளைவு நிகழும்
   a) அகச்சிவப்புக் கதிர்கள்  b) x- கதிர்கள்
   c) ரேடியோ அலைகள்  d) மைக்ரோ அலைகள்
5. ஒளி மின்கலன் 'd' தொலைவில் உள்ள ஒளிமூலத்தினை ஒளியூட்டப்படுகிறது. தொலைவு $\frac{d}{2}$ ஆகும் பொழுது ஒரு விநாடியில் எலக்ட்ரானின் எண்ணிக்கையானது
   a) மாறாது  b) நான்கு மடங்காகும்
   c) இரண்டு மடங்காகும்  d) $\frac{1}{4}$ மடங்காகும்
6. கீழே கொடுக்கப்பட்டவற்றில் எதனை அதிகரிக்கும் பொழுது உமிழப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்
   a) ஒளியின் செறிவு  c) ஒளியின் அலைநீளம்
   c) ஒளியின் அதிர்வெண்  d) எப்பொழுதுமில்லை
7. ஒளி மின்கலனானது 1 மீட்டர் தொலைவில் வைக்கப்பட்டுள்ள புள்ளி ஒளிமூலத்தினால் ஒளியூட்டப்படுகிறது. ஒளி மூலமானது 2 மீ தொலைவிற்கு நகர்த்தும் பொழுது
   a) உமிழப்பட்ட ஒவ்வொரு எலக்ட்ரானும் தொடக்க ஆற்றலில் கால்பகுதியை எடுத்துச் செல்லும்.
   b) உமிழப்பட்ட எலக்ட்ரான்களின் எண்ணிக்கை தொடக்கத்தில் உள்ள எண்ணிக்கையில் பாதியாகும்
   c) உமிழப்பட்ட எலக்ட்ரான்கள் ஒவ்வொன்றும் தொடக்க ஆற்றலில் பாதியை எடுத்துச் செல்லும்.
   d) உமிழப்பட்ட எலக்ட்ரான்களின் எண்ணிக்கை தொடக்கத்தில் உள்ள எண்ணிக்கையில் கால் பங்காகும்.
8. கீழே கொடுக்கப்பட்ட கூற்றுகளில் சரியானது எது?
   a) ஒளியின் செறிவு அதிகரிக்க ஒளி மின்னோட்டம் அதிகரிக்கும்
   b) ஒளியின் செறிவு அதிகரிக்க நிறுத்து மின்னழுத்தம் அதிகரிக்கும்
   c) அதிர்வெண் அதிகரிக்க ஒளிமின்னோட்டம் அதிகரிக்கும்
   d) ஒளி மின்னோட்டம் அளிக்கப்பட்ட மின்னழுத்தத்திற்கு நேர்விகிதத்திலிருக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

9. ஒளி உணர்வு மிக்க பொருளின் மீது பயன் தொடக்க அதிர்வெண்ணை விட 1.5 மடங்கு அதிர்வெண் கொண்ட ஒளியானது படுகிறது. அதிர்வெண் பாதியாகவும் செறிவு இரண்டு மடங்காகவும் ஆனால் ஒளி மின்னோட்டம் என்னவாகும்?

a) இரண்டு மடங்காகும் b) நான்கு மடங்காகும்

c) கால் மடங்காகும் d) சுழி

10. ஒளி உணர்வு மிக்க பொருளின் வெளியேற்று ஆற்றல் 4.0ev. அந்தப் பொருளிலிருந்து ஒளி எலக்ட்ரானை வெளியேற்றத் தேவையான ஒளியின் பெரும அலைநீளம்

a) 3100 nm b) 966 nm c) 31nm d) 310 nm

11. $2v_0$ அதிர்வெண் கொண்ட ஒளி உலோகத் தகட்டில் விழும் பொழுது உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும திசைவேகம் $v_1$, படுகதிரின் அதிர்வெண் $5v_0$ ஆக அதிகரித்தால் உமிழப்படும் எல்க்ட்ரானின் பெருமத் திசைவேகம் $V_2$ எனில் $V_1$ மற்றும் $V_2$- ற்கிடையேயான தகவு

a) 1: 2 b) 1 : 4 c) 4 : 1 d) 2 : 1

12. ஒளி மின்கலனின் கேத்தோடின் மீது ஆற்றல் கொண்ட ∴போட்டான் விழும் போது உமிழப்படும் ஒளி எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றல் 2ev. கேத்தோடு இன் மீது விழுகின்ற ∴போட்டானின் ஆற்றல் 6ev எனும் போது ஆனோடு (A)ஐ எந்த ஒரு ஒளி எலக்ட்ரானும் அடையவில்லை எனில் கேதோடு (C) ஐ பொறுத்து ஆனோடு (A) யின் நிறுத்து மின்னழுத்தம்

a) + 3V b) +4V c) -1V d) -3V

13. உலோகப் பரப்பு $\lambda$ அலைநீளம் கொண்ட கதிர்வீச்சினால் ஒளியூட்டப்படும் போது அதன் நிறுத்து மின்னழுத்தம் $V, 2\lambda$ அலைநீளம் கொண்ட கதிர்வீச்சினால் ஒளியூட்டப்படும் போது நிறுத்து மின்னழுத்தம் V/4 எனில் உலோகப் பரப்பின் பயன் தொடக்க அலைநீளம்

a) $\frac{5\lambda}{4}$ b) $3\lambda$ c) $4\lambda$ d) $5\lambda$

14. படுகதிரின் ஆற்றல் 20% அதிகரிக்கும் போது உலாகப் பரப்பிலிருந்து உமிழப்படும் ஒளி எலக்ட்ரானின் இயக்க ஆற்றலானது 0.5eV இலிருந்து 0.8eV ஆக அதிகரிக்கிறது. எனில் உலோகத்தின் வெளியேற்று ஆற்றல்

a) 0.65 ev b) 1.0 ev c) 1.3 ev d) 1.5 ev

15. 0.5ev வெளியேற்று ஆற்றல் கொண்ட ஒளி உணர்வுமிக்க உலோகப் பரப்பு ஒன்றின் மீது 1ev மற்றும் 25ev ஆற்றல் கொண்ட படுகதிர் ∴போட்டான் அடுத்தடுத்து ஒளியூட்டுகிறது எனில் உமிழப்படும் ஒளி எலக்ட்ரானின் பெரும வேகத்தின் தகவு

a) 1 : 4 b) 1 : 2 c) 1 : 1 d) 1 : 5



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



16. ஒளி உணர்வு மிக்க உலோகம் ஒன்றின் பயன் தொடக்க அதிர்வெண் 3.3 x $10^{14}$HZ கொண்ட உலோகப் பரப்பின் மீது 8.2x$10^{14}$HZ அதிர்வெண் கொண்ட ஒளிபடும் போது ஒளி எலக்ட்ரான் உமிழ்வதற்கான வெட்டு மின்னழுத்தம்

a) 1V b) 2V c) 3V d) 5V

17. ஒளி உணர்வுமிக்க பொருளின் பரப்பிற்கான வெளியேற்று ஆற்றல் 6.2ev. படுகதிரின் எந்தப் பகுதியின் அலைநீளத்திற்கு நிறுத்து மின்னழுத்தம் 5V.

a) அகச்சிவப்புப் பகுதி b) X கதிர் பகுதி

c) புற ஊதாப் பகுதி d) கண்ணுறு பகுதி

18. hγ ஆற்றல் கொண்ட ஒளி ∴போட்டான் $E_0$ வெளியேற்று ஆற்றல் கொண்ட அலுமினியத் தகட்டில் படும் போது உமிழப்படும் ஒளி எலக்ட்ரான்களின் இயக்க ஆற்றல் K. படுகதிரின் அதிர்வெண் இரு மடங்காகும் போது உமிழப்படும் ஒளி எலக்ட்ரான்களின் இயக்க ஆற்றல்

a) E+hr b) K+$E_o$ c) 2K d) K

19. ஒளி உணர்வுமிக்க உலோகப் பரப்பின் வெளியேற்று ஆற்றல் $h\gamma_0$ உலோகப் பரப்பின் மீது $2h\gamma_0$ ஆற்றல் கொண்ட ∴போட்டான் படும் போது வெளிவரும் எலக்ட்ரானின் பெரும திசைவேகம் 4x$10^6$m/s ∴போட்டானின் ஆற்றல் $5hr\gamma_0$ ஆக அதிகரிக்கும் போது ஒளி எலக்ட்ரானின் பெரும திசைவேகம்

a) 2 x $10^7$ m/s b) 2 x $10^6$ m/s c) 8 x $10^6$ m/s d) 8 x $10^5$ m/s

20. உலோகப் பரப்பு ஒன்றின் ஒளி மின்னோட்ட வெளியேற்று ஆற்றல் 4.125ev. உலோகப் பரப்பின் பயன் தொடக்க அலைநீளம்

a) 3000 $A^o$ b) 2062.5 $A^o$ c) 4125 $A^o$ d) 6000 $A^o$

21. ஒளி உமிழ் மின்கலத்தில் கிளர்ச்சி நிலை அலைநீளம் λ விற்கு உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும வேகம் V. கிளர்ச்சி அலைநீளம் $\frac{3\lambda}{4}$ என மாற்றப்படும் போது உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும வேகம் ஆனது

a) $V\left(\frac{4}{3}\right)^{\frac{1}{2}}$ ஐ விட குறைவு b) $V\left(\frac{4}{3}\right)^{\frac{1}{2}}$

c) $V\left(\frac{3}{4}\right)^{\frac{1}{2}}$ d) $V\left(\frac{4}{3}\right)^{\frac{1}{2}}$ ஐ விட அதிகம்

22. ஒளி மின்னோட்ட உமிழ்ப்பானில் 300 nm அலைநீளம் கொண்ட ஒளி படும் போது ஒளி எலக்ட்ரான் உமிழப்படுகிறது. வேறொரு உமிழ்ப்பானில் ஒளி உமிழ்வு ஏற்பட 600 nm அலை நீளம் கொண்ட ஒளி போதுமானதாக உள்ளது. இரண்டு உமிழ்ப்பான்களுக்கிடையேயான வெளியேற்று ஆற்றலுக்கான தகவு

a) 1 : 2 b) 2 : 1 c) 4 : 1 d) 1 : 4



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. உலோகத்தின் ஒளி மின்னோட்ட வெளியேற்று ஆற்றல் 1eV. உலோகத்தின் மீது விழும் ஒளியின் அலைநீளம் $\lambda = 3000A^o$ வெளிப்படும் ஒளி எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றல்

a) 10 மீ/வி b) $10^2$ மீ/வி c) $10^4$ மீ/வி d) $10^6$ மீ /வி

24. அலுமினிய உலோகப் பரப்பின் மீது 6.2eV ஆற்றல் கொண்ட புற ஊதாக் கதிர் விழுகின்றது. உமிழப்படும் எல்க்ட்ரான்களின் பெரும இயக்க ஆற்றலானது (வெளியேற்று ஆற்றல் = 4.2eV)

a) 3.2 x $10^{-21}$J b) 3.2 x $10^{-19}$J c) 7 x $10^{-25}$J d) 9 x $10^{-32}$J

25. பயன் தொடக்க அதிர்வெண்ணில் சோடியத்தின் ஒளி மின் விளைவிற்கான அலைநீளம் 5000$A^o$. அதன் வெளியேற்று ஆற்றல்

a) 4 x $10^{-19}$J b) 1J c) 2 x $10^{-19}$J d) 3 x $10^{-19}$J

26. 200w திறன் கொண்ட சோடியம் தெருவிளக்கு $0.6\mu m$. அலைநீளமுடைய மஞ்சள் ஒளியை உமிழ்கிறது. மின்னாற்றலை ஒளியாற்றலாக மாற்றுவதன் பயனுறு திறன் 25% எனில் ஒரு விநாடியில் உமிழப்படும் மஞ்சள் நிற ஃபோட்டானின் எண்ணிக்கை

a) 1.5 x $10^{20}$ b) 6 x $10^8$ c) 62 x $10^{20}$ d) 3 x $10^{19}$

27. ஹீலியம் நியான் லேசர் உருவாக்கும் ஒற்றை நிற ஒளியின் அலை நீளம் 667nm, உமிழப்படும் திறனின் அளவு 9mw. இந்த ஒளிக்கற்றை மூலம் இலக்கினை அடையும் ஃபோட்டான்களின் எண்ணிக்கை (விநாடியில்)

a) 3 x $10^{16}$ b) 9 x $10^{15}$ c) 3 x $10^{19}$ d) 9 x $10^{17}$

28. லேசரினால் உருவாகும் ஒற்றை நிற ஒளியின் அதிர்வெண் 6.0 x $10^{14}$Hz. உமிழப்பட்ட திறன் 2x$10^{-3}$w. ஒளி மூலத்தினால் விநாடியில் சராசரியாக உமிழப்படும் ஃபோட்டான்களின் எண்ணிக்கை.

a) 5 x $10^{16}$ b) 5 x $10^{17}$ c) 5 x $10^{14}$ d) 5 x $10^{15}$

29. 1MeV ஆற்றல் கொண்ட ஃபோட்டானின் உந்தம் $kgms^{-1}$ல்

a) 5 x $10^{-22}$ b) 0.33 x $10^6$ c) 7 x $10^{-24}$ d) $10^{-22}$

30. ஃபோட்டானின் அதிர்வெண் $\gamma$ மற்றும் திசைவேகம் C எனில் கீழே கொடுக்கப்பட்டவற்றில் அலை நீளத்தைக் குறிப்பது

a) $\frac{h\gamma}{C^2}$ b) $h\gamma$ c) $\frac{hc}{E}$ d) $\frac{h\gamma}{C}$

31. அலைநீளம் $\lambda$ உடைய ஃபோட்டானின் அலைநீளம்

a) $\frac{h\gamma}{c}$ b) சுழி c) $\frac{h\lambda}{C^2}$ d) $\frac{h\lambda}{C}$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

32. 1keV ஆற்றல் கொண்ட ∴போட்டானின் அலைநீளம் $1.24 \times 10^{-9}$ m எனில் 1MeV ஆற்றல் கொண்ட ∴போட்டானின் அதிர்வெண் என்ன?

a) $1.24 \times 10^{15}$ b) $2.4 \times 10^{20}$ c) $1.24 \times 10^{18}$ d) $2.4 \times 10^{23}$

33. ஒரு ரேடியோ பரப்பி 880 kHz அதிர்வெண் மற்றும் 10kw திறனில் இயங்குகிறது. எனில் ஒரு விநாடி நேரத்தில் உமிழப்படும் ∴போட்டானின் எண்ணிக்கை

a) $1.72 \times 10^{31}$ b) $1.327 \times 10^{25}$ c) $1.327 \times 10^{37}$ d) $1.327 \times 10^{45}$

34. மின்காந்த கதிர்வீச்சில் ∴போட்டானின் உந்தம் $3.3 \times 10^{-29}$kgms$^{-1}$ எனில் தொடர்படைய அலையின் அதிர்வெண் என்ன?

a) $1.5 \times 10^{13}$Hz b) $7.5 \times 10^{12}$Hz c) $6 \times 10^{3}$Hz d) $3 \times 10^{3}$Hz

35. அலைநீளம் $\lambda$ கொண்ட ∴போட்டானின் ஆற்றல்

a) $hc\lambda$ b) $\frac{hc}{\lambda}$ c) $\frac{\lambda}{hc}$ d) $\frac{\lambda h}{c}$

36. ஒரு எலக்ட்ரான் 10000V மின்னழுத்த வேறுபாட்டில் முடுக்கப்படுகிறது. அந்த எலக்ட்ரானின் டி.பிராலி அலைநீளம் ($m_e = 9.1 \times 10^{-31}$kg)

a) $1.227 \times 10^{-12}$m b) $0.1227 \times 10^{-12}$m c) $12.27 \times 10^{-12}$m d) $12.27 \times 10^{-10}$m

37. X-கதிர் குழாயிலுள்ள இலக்கினை m நிறையும், டி-பிராலி அலைநீளம் $\lambda$ வும் உடைய எலக்ட்ரான் மோதுகிறது. இலக்கிலிருந்து வெளிப்படுகின்ற கதிரின் பயன் தொடக்க அலைநீளம்

a) $\lambda_0 = \frac{2mc\lambda^2}{h}$ b) $\lambda_0 = \frac{2h}{mc}$ c) $\lambda_0 = \frac{2m^2c^2\lambda^3}{h^2}$ d) $\lambda_o = \lambda$

38. ∴போட்டான் மற்றும் m நிறை கொண்ட எலக்ட்ரான் ஆகியவற்றின் ஆற்றல் சமம் எனில் அவற்றின் டி-பிராலி அலைநீளங்களுக்கான தகவு

a) $c(2mE)^{\frac{1}{2}}$ b) $\frac{1}{c}\left(\frac{2m}{E}\right)^{\frac{1}{2}}$ c) $\frac{1}{c}\left(\frac{E}{2m}\right)^{\frac{1}{2}}$ d) $\left(\frac{E}{2m}\right)^{2}$

39. துகள்கள் ஒரே திசைவேகத்தில் இயங்கும் போது எந்தத் துகளின் டி-பிராலி அலை நீளமானது பெருமமாகும்.

a) புரோட்டான் b) $\alpha -$ துகள் c) நியூட்ரான் d) $\beta -$ துகள்

40. ஒரு புரோட்டான் 1V மின்னழுத்த வேறுபாட்டில் முடுக்கமடையும் பொழுது அதன் இயக்க ஆற்றல்

a) 12V b) 13.6 eV c) 1840eV d) 0.54eV

41. 100V மின்னழுத்த வேறுபாட்டில் முடுக்கமடையும் எலக்ட்ரானின் இயக்க ஆற்றல்

a) 416.6 கலோரி b) 6.636 கலோரி c) $1.602 \times 10^{-17}$J d) $1.6 \times 10^{4}$J



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. ஒரு எலக்ட்ரான் கற்றையின் இயக்க ஆற்றல் 100eV ஆகும். எலக்ட்ரானின் நிறை $9.1 \times 10^{-31}$kg மற்றும் 1eV = $1.6 \times 10^{-19}$J எனில் எலக்ட்ரான் கற்றையுடன் தொடர்புடைய எலக்ட்ரானின் அலைநீளத்தைக் காண்க.

a) 24.6 $A^o$ b) 0.12 $A^o$ c) 1.2 $A^o$ d) 6.3$A^o$

43. வெற்றிடத்தில் உள்ள மின்னழுத்த வேறுபாடு V வழியே m நிறையும், e மின்னூட்டமும் கொண்ட ஓய்வு நிலை எலக்ட்ரான் செல்லும் போது முடுக்கமடைகிறது. அந்த எலக்ட்ரானின் இறுதித் திசைவேகம்

a) $\sqrt{\frac{2eV}{m}}$ b) $\sqrt{\frac{eV}{m}}$ c) $\frac{eV}{2m}$ d) $\frac{eV}{m}$

44. எலக்ட்ரான் மற்றும் ∴போட்டானின் அலைநீளம் சமம் எனில் பின்வருவனவற்றுள் எது எலக்ட்ரான் மற்றும் ∴போட்டானுக்குச் சமமாகும்.

a) உந்தம் b) கோண உந்தம் c) ஆற்றல் d) திசைவேகம்

45. ‘m’ நிறையும் ‘v’ திசைவேகமும் கொண்ட துகளின் டி-பிராலி அலையின் நீளமானது

a) $\frac{h}{mv}$ b) hmv c) $\frac{mh}{v}$ d) $\frac{m}{hv}$

# விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | b | 2 | c | 3 | b | 4 | b | 5 | b |
| 6 | a | 7 | d | 8 | a | 9 | d | 10 | d |
| 11 | a | 12 | d | 13 | b | 14 | b | 15 | b |
| 16 | b | 17 | c | 18 | a | 19 | c | 20 | a |
| 21 | d | 22 | b | 23 | d | 24 | b | 25 | a |
| 26 | a | 27 | a | 28 | d | 29 | a | 30 | c |
| 31 | a | 32 | b | 33 | a | 34 | a | 35 | b |
| 36 | c | 37 | a | 38 | c | 39 | d | 40 | a |
| 41 | c | 42 | c | 43 | a | 44 | a | 45 | a |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# விளக்கங்கள்

1. b) நிறுத்து மின்னழுத்தம் படுகதிரின் செறிவைச் சார்ந்தது அல்ல. எனவே நிறுத்து மின்னழுத்தம் மாறாது.
2. c) நிறுத்து மின்னழுத்தம் $V_0$ உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும் இயக்க ஆற்றலைப் பொறுத்து அமையும்.

   $K_{max} = eV_0$

   $0.5eV = eV_0$

   $V_0 = 0.5$ v
3. b) ஒளி மின்னோட்டத்தை ஒளி எலக்ட்ரானின் எண்ணிக்கை தீர்மானிக்கிறது. உமிழப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை படுகின்ற ∴போட்டானின் எண்ணிக்கையைப் பொறுத்தது என்க. எனவே உமிழப்படும் ஒளி எலக்ட்ரான்களின் எண்ணிக்கை படுகின்ற ஒளியின் செறிவினைச் சார்ந்தது.
4. b)
5. b)
6. a) ஒளி மின்னோட்டம் படுகதிரின் செறிவிற்கு நேர்தகவு.
7. d) ஒளி மின்னோட்டம் $\propto$ ஒளியின் செறிவு $\propto \frac{1}{(\text{தொலைவு})^2}$

   $I \propto \frac{1}{(\text{தொலைவு})^2}$
8. a) உமிழப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கையானது படுகின்ற ஒளியின் செறிவிற்கு நேர்தகவு. எனவே ஒளியின் செறிவு அதிகரிக்க ஒளி மின்னோட்டமும் அதிகரிக்கும்.
9. d) தொடக்கத்தில் $v = 1.5v_0$

   $v^1 = \frac{v}{2} = \frac{1.5v_0}{2} = 0.75v_0$

   பயன் தொடக்க அதிர்வெண்ணை விட அதிர்வெண் குறைவாகையால் ஒளி மின் விளைவு நிகழாது.
10. d) $\lambda_0 = \frac{hc}{\phi} = \frac{1240ev}{4ev} nm = 310nm$
11. a) படுகதிரின் அதிர்வெண் $2v_0$ எனும் போது

    $h(2v_0) = hv_0 + \frac{1}{2}mv^2_{\text{பெரும}}$

    $\therefore hv_0 = \frac{1}{2}mv^2_{1\,\text{பெரும}}$ ---------------- (1)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



படுகதிரின் அதிர்வெண்

$5v_0$ எனும் போது

$$h(5v_0) = hv_0 + \frac{1}{2}mv_2^2$$

$$\therefore 4hv_0 = \frac{1}{2}mv_2^2 \quad \text{-------------------} \quad (2)$$

ச (1) ஐ ச (2) ஆல் வகுக்க

$$\frac{hv_0}{4hv_0} = \frac{\frac{1}{2}mv_1^2}{\frac{1}{2}mv_2^2}$$

$$\frac{1}{4} = \frac{V_1^2}{V_2^2} \Rightarrow \frac{V_1}{V_2} = \frac{1}{2}$$

12. d) $hv = \phi + K.E_{\text{பெருமம்}}$

$$E_r = \phi + K.E_{\text{பெருமம்}}$$

$$\phi = E_v - K.E_{\text{பெருமம்}} = 5eV - 2eV = 3eV$$

$E_v = 6eV$ எனில்

$$K.E._{\text{பெருமம்}} = hv - \phi$$

$$= 6 - 3 = 3eV$$

$$e(V_{cathods} - V_{anode}) = 3eV$$

$$V_{Cathode} - V_{anode} = 3V$$

$$-V_0 = 3V$$

நிறுத்து மின்னழுத்தம் $V_0 = -3V$

13. ஒளி மின்னோட்டத்திற்கான ஐன்ஸ்டீன் சமன்பாட்டின் படி

$$eV_s = \frac{hc}{\lambda} - \frac{hc}{\lambda_0}$$

கொடுக்கப்பட்ட தகவல் படி

$$eV_s = \frac{hc}{\lambda} - \frac{hc}{\lambda_0} \Rightarrow \frac{eV_s}{4} = \frac{hc}{4\lambda} - \frac{hc}{4\lambda_0} \Rightarrow (1)$$

$$\frac{eV_s}{4} = \frac{hc}{2\lambda} - \frac{hc}{\lambda_0} \Rightarrow (2)$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



$(1)-(2) \Rightarrow \left(\frac{hc}{4\lambda}-\frac{hc}{2\lambda}\right)-\left(\frac{hc}{4\lambda_0}-\frac{hc}{\lambda_0}\right)=0$

$\left(\frac{-hc}{4\lambda}\right)-\left(\frac{-3hc}{4\lambda_0}\right)=0$

$\therefore \frac{3hc}{4\lambda_0}=\frac{hc}{4\lambda}$

$\therefore \lambda_0=3\lambda$

14. b) கொடுக்கப்பட்ட தகவல் படி

படுகதிரின் ஆற்றல் $hv \Rightarrow 1.2hv$

இயக்க ஆற்றல் $0.5eV \rightarrow 0.8eV$

சமன்பாட்டின் படி $hv=\phi_0+E$

$E=hv-\phi_0$

$0.5eV=hv-\phi_0$ -------------- (1)

$0.8eV=1.2hv-\phi_0$ -------------- (2)

(1) x 12 $6eV=12hv-12\phi_0$

(2) x 10 $8eV=12hv-10\phi_0$

(2) – (1) $2eV=2\phi_0$

$\therefore \phi_0=1eV$

15. b) $\frac{1}{2}mV^2{}_{\text{பெருமம்}}=hv-\phi_0$

$\frac{1}{2}mv_1^2{}_{\text{பெருமம்}}=1eV-0.5eV=0.5eV$

$\frac{1}{2}mV_2^2{}_{\text{பெருமம்}}=2.5eV-0.5eV=2eV$

$\frac{V_1^2}{V_2^2}=\frac{0.5eV}{2eV}=\frac{1}{4}$

$\therefore \frac{V_1}{V_2}=\frac{1}{2}$ $\therefore V_1:V_2=1:2$

16. b) தேவையான சமன்பாடு

$eV_0=hv-hv_0$

$v_0=\frac{h(v-v_0)}{e}$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



$$=\frac{6.63\times10^{-34}\left(8.2\times10^{14}-3.3\times10^{14}\right)}{1.6\times10^{-19}}$$

$$=\frac{6.63\times10^{-34}\times4.9\times10^{14}}{1.6\times10^{-19}}=\frac{6.63\times4.9\times10^{-20}}{1.6\times10^{-19}}$$

$$=20.03\times10^{-1}V$$

$$\approx 2V$$

17. c) $\phi_0 = 6.2eV$

$K_{பெருமம்} = 5eV$

$hv = 6.2eV + 5eV$

$= 11.2eV$

$$\lambda=\frac{hc}{E}=\frac{12400eVA^o}{11.2eV}=1107A^o$$

இது புற ஊதாப் பகுதிக்கு உரியது.

18. a) $h\gamma_0 = E_0 + K$

$K = h\gamma - E_0$

$K' = h(2\gamma) - E_o$

$= h\gamma + h\gamma - E_o$

$K' = h\gamma + K$

19. c) இயக்க ஆற்றல் $(K.E.) = hv - \phi$

$$\frac{1}{2}m\left(4\times10^6\right)^2 = 2hv_0 - hv_0 = hv_0$$

$$\frac{1}{2}mv^2_{பெருமம்} = 5hv_0 - hv_0 = 4hv_0 = 4\times\frac{1}{2}m\left(4\times10^6\right)^2$$

$V^2_{பெருமம்} = 64 \times 10^{12}$

$V_{பெருமம்} = 8 \times 10^6$ m/s

20. a) $\phi = hv_0 = \frac{hc}{\lambda_0}$

$$\Rightarrow \lambda_0=\frac{hc}{\phi}=\frac{1242eVnm}{4.124eV}=3000A^o.$$

21. d) ஒளி மின் விளைவிற்கான ஐன்ஸ்டீன் சமன்பாட்டின் படி

$$\frac{1}{2}mv^2=\frac{hc}{\lambda}-W_0 \Rightarrow \frac{hc}{\lambda}=\frac{1}{2}mv^2+w_o$$

$$\frac{1}{2}mv_1^2=\frac{hc}{3\lambda/4}-w_o \Rightarrow \frac{4}{3}\frac{hc}{\lambda}-w_o$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



$$=\frac{4}{3}\left(\frac{1}{2}mv^2+w_o\right)-w_o=\frac{4}{3}\left(\frac{1}{2}mv^2\right)+\frac{1}{3}w_o$$

$$V_1^2=\frac{4}{3}V^2+\frac{2}{3}\frac{w_e}{m}$$

$$V_1^2\to\frac{4}{3}V^2\text{ (or) }V_1>\left(\frac{4}{3}\right)^{\frac{1}{2}}V$$

22. b) $w_o=\frac{hc}{\lambda_0}$ $\qquad w_0\propto\frac{1}{\lambda_0}$

$$\Rightarrow\frac{w_1}{w_2}=\frac{\lambda_2}{\lambda_1}=\frac{600\,nm}{300\,nm}=\frac{2}{1}$$

$$w_1:w_2=2:1$$

23. d) $hv=W+\frac{1}{2}mv^2$

$$\frac{hc}{\lambda}=W+\frac{1}{2}mv^2$$

இங்கு $\lambda=3000A^0$

$= 3000 \times 10^{-10}$ m

$W=1eV=1\times1.6\times10^{-19}$ Joule.

$$\frac{6.6\times10^{-34}\times3\times10^8}{3000\times10^{-10}}=1.6\times10^{-19}+\frac{1}{2}\left(9.1\times10^{-31}\right)V^2$$

$$6.6\times10^{-19}=1.6\times10^{-19}+\frac{1}{2}\left(9.1\times10^{-31}\right)V^2$$

$$5\times10^{-19}=\frac{1}{2}\left(9.1\times10^{-31}\right)V^2$$

$$\frac{10\times10^{-19}}{9.1\times10^{-31}}=V^2$$

$$\frac{10}{9}\times10^{12}=V^2$$

$$1.01\times10^{12}=V^2$$

$$\therefore V\approx10^6\,m/s$$

24. b) K.E. = E – $w_o$

= 6.2 – 4.2 = 2eV

= 2 x 1.6 x $10^{19}$J = 3.2 x $10^{-19}$ J



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25. a) $w_0 = \frac{hc}{\lambda_0}$

$= \frac{6.63\times10^{-34}\times3\times10^{8}}{5000\times10^{-10}}$

$= 4\times10^{-19} J$

26. a) $E_p = \frac{hc}{\lambda}$

$= \frac{(6.6\times10^{-34}Js)(3\times10^{8}m/s)}{0.6\times10^{-6}m} = 33 \text{ x } 10^{-20} J$

ஒரு விநாடியில் உமிழும் ∴போட்டானின் எண்ணிக்கை

$N = \frac{\frac{25}{100}P}{E} = \frac{25\times2w}{33\times10^{-20}J} = 1.5\times10^{20}$

27. a) $\lambda = 6670A^0$

∴போட்டானின் ஆற்றல் $E = \frac{12400eVA^0}{6670A^0} = \frac{12400}{6670}\times1.6\times10^{-19}J$

ஒரு விநாடியில் உமிழப்படும் ஆற்றல் $P = 9 \text{ x } 10^{-3} J$

படுகின்ற ∴போட்டானின் எண்ணிக்கை $N = \frac{P}{E}$

$= \frac{9\times10^{-3}\times6670}{12400\times1.6\times10^{-19}}$

$= 3 \text{ x } 10^{16}$

28. d) திறன் $P = 2 \text{ x } 10^{-3}w$

$E = h\gamma = 6.63 \text{ x } 10^{-34} \text{ x } 6 \text{ x } 10^{14}J$

ஒரு விநாடியில் உமிழப்படும் எலக்ட்ரானின் எண்ணிக்கை $N = \frac{P}{E} = \frac{2\times10^{-3}}{6.63\times10^{-34}\times6\times10^{14}}$

$= 0.05\times10^{17} = 5\times10^{15}$

29. a) ∴போட்டானின் ஆற்றல் E = 1MeV

∴போட்டானின் உந்தம் $P = \frac{E}{C}$ $[\because E = MC^2 = P.C]$

$= \frac{1\times10^{6}\times1.6\times10^{-19}}{3\times10^{8}}$

$= 0.53 \text{ x } 10^{-21}$

$= 5 \text{ x } 10^{-22}$ kg ms$^{-1}$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



30. c) ∴போட்டானின் ஆற்றல் $E = \frac{hc}{\lambda}$

$\therefore \lambda = \frac{hc}{E}$

31. a) ∴போட்டானின் உந்தம் $P = \frac{mc^2}{C} = \frac{E}{C} = \frac{hv}{C}$

32. b) $\frac{hc}{\lambda} = 10^3 eV$ $\qquad hv = 10^6 eV$

$\frac{\not{h}v}{\not{h}C/\lambda} = \frac{10^6 eV}{10^3 eV}$

$\therefore v = \frac{10^3 C}{\lambda} = \frac{10^3 \times 3 \times 10^8}{1.24 \times 10^{-9}} = 2.4 \times 10^{20} HZ$

33. a) ஒரு விநாடியில் உமிழப்படும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை

$n = \frac{\text{திறன்}}{\text{∴போட்டானின் ஆற்றல்}}$

$= \frac{P}{hv} = \frac{10000}{6.6 \times 10^{-34} \times 880 \times 10^3}$

$= 1.72 \times 10^{31}$

34. a) ∴போட்டானின் உந்தம் $= \frac{hv}{C}$

$P = \frac{hv}{C} \Rightarrow \frac{C}{v} = \frac{h}{P} = \lambda$

$\therefore v = \frac{C}{\lambda} = \frac{C}{h/P} = \frac{C.P}{h}$

$= \frac{3 \times 10^8 \times 3.3 \times 10^{-29}}{6.6 \times 10^{-34}} = 1.5 \times 10^{13} Hz$

35. b) ∴போட்டானின் ஆற்றல் $E = hv = \frac{hc}{\lambda}$

36. c) டி-பிராலி அலை நீளம்

$\lambda = \frac{12.27 A^0}{\sqrt{V}}$

$= \frac{12.27}{\sqrt{10000}} \times 10^{-10} m$

$= 12.27 \times 10^{-12}$ m



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

37. a) $K.E. = \frac{P^2}{2m}$

$= \frac{(h/\lambda)^2}{2m} = \frac{h^2}{2m\lambda^2}$

எனவே ∴போட்டானின் பெரும இயக்க ஆற்றல் $K = \frac{hc}{\lambda_0}$

$\frac{hc}{\lambda_o} = \frac{h^2}{2m\lambda^2}$

$\therefore \lambda_o = \frac{2mc\lambda^2}{4}$

38. c) E ஆற்றல் கொண்ட எலக்ட்ரானின் அலைநீளம்

$\lambda_e = \frac{h}{P} = \frac{h}{\sqrt{2mE}}$

∴போட்டானின் ஆற்றல் $E_P = hv = \frac{hc}{\lambda_P} \Rightarrow \lambda_P = \frac{hc}{E}$

$\therefore \frac{\lambda_e}{\lambda_P} = \frac{h}{\sqrt{2mE}} \times \frac{E}{hc}$

$= \frac{1}{C}\frac{\sqrt{E}.\sqrt{E}}{\sqrt{2m}\sqrt{E}}$

$= \frac{1}{C}\sqrt{\frac{E}{2m}} = \frac{1}{C}\left(\frac{E}{2m}\right)^{1/2}$

39. d) $\lambda = \frac{h}{mv}$

அலை நீளமானது நிறைக்கு எதிர் தகவு, $\beta -$ துகளின் நிறை மிகவும் குறைவு. எனவே அதன் அலை நீளம் பெருமமாகும்.

40. a) K.E. = $1.6 \times 10^{-19} \times 1$J

= 1eV

41. c) மின்னழுத்த வேறுபாடு 100 Volt

இயக்க ஆற்றல் = eV

= $1.6 \times 10^{-19} \times 100$ J

= $1.6 \times 10^{-17}$ J

42. c) இயக்க ஆற்றல் (E) = 100 eV

= $100 \times 1.6 \times 10^{-19}$ J



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அலை நீளம் $\lambda = \dfrac{h}{\sqrt{2mE}}$

$= \dfrac{6.6\times10^{-34}}{\sqrt{2\times9.1\times10^{-31}\times100\times1.6\times10^{-19}}}$

$= 1.2 \times 10^{-10}$ m

$= 1.2A^0$

43. a) எலக்ட்ரானின் இயக்க ஆற்றல் $(K.E.) = \dfrac{1}{2}mv^2 = eV$

இறுதி திசைவேகம் $(V) = \sqrt{\dfrac{2ev}{m}}$

44. a) அலைநீளம் $\lambda = \dfrac{h}{mv} = \dfrac{h}{p}$

அலைநீளம் சமம் எனில் உந்தம் கண்டிப்பாக சமமாக இருக்கும்.

45 a) நிறை m மற்றும் திசைவேகம் V கொண்ட துகளின் டி பிராலி அலை நீளமானது.

$\lambda = \dfrac{h}{P} = \dfrac{h}{mv}$

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# இயல் - 9

# அணுக்களும் அணுக்கருக்களும்

**போர் அணு மாதிரி**

**எடுகோள் - I**

வட்டபாதையில் எலக்ட்ரான் இயங்க தேவையான மையநோக்கு விசையை கூலும் விசை தருகிறது.

**எடுகோள் - II**

நிலைத்தன்மை உடைய வட்டபாதைகளில் (கதிர்வீச்சு பாதை) எலக்ட்ரான்கள் சுற்றி வருகின்றன. இப்பாதையில் எலக்ட்ரானின் கோண உந்தம் $\frac{h}{2\pi}$ ன் முழுமடங்காக இருக்கும்

**எடுகோள் - III**

இரு சுற்றுபாதைகளின் ஆற்றல் வேறுபாட்டுக்கு $(\Delta E)$ சமமான ஆற்றல் கொண்ட போட்டானை உட்கவர்வதாலோ அல்லது வெளியிடுவதனாலோ எலக்ட்ரான் ஒரு சுற்றுபாதையில் இருந்து மற்றொன்றிக்கு தாவ இயலும்

$$\Delta E = E_{\text{இறுதி}} - E_{\text{தொடக்கம்}} = h\gamma = \frac{hc}{\lambda}$$

**சூத்திரங்கள்**

1. போரின் n வது வட்டபாதையின் ஆரம்

$$r_n = \frac{4\pi\varepsilon_0 n^2 t^2}{z m e^2}$$

$$\text{or } r_n = \frac{0.529 n^2}{2} \overset{0}{A}$$

அதாவது $r_n = a_0 \frac{n^2}{2}$

இங்கு $a_0 = \frac{\varepsilon_0 h^2}{\pi m e^2} = 0.529 \overset{0}{A}$ போர் ஆரம் எனப்படும்.

2. எலக்ட்ரானின் திசைவேகம்

$$v_n = \frac{h}{2\pi m a_0} \frac{z}{n}$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



$\therefore v_n \propto \frac{1}{n}$

முதன்மை குவாண்டம் எண் அதிகரிக்கும் போது எலக்ட்ரானின் திசைவேகம் குறைகிறது.

3. எலக்ட்ரானின் மொத்த ஆற்றல்

$E_n = KE_n + U_n$

$= \frac{me^4z^2}{8\varepsilon_0^2h^2n^2} - \frac{1}{4\pi\varepsilon_0}\frac{ze^2}{r_n}$

$E_n = \frac{-me^4z^2}{8\varepsilon_0^2h^2}\frac{1}{n^2}$ Joule

$E_n = -13.6\frac{1}{n^2}$ ev

$E_1 = -13.6$ ev $\quad E_2 = -3.4$ev $\quad E_3 = -1.51$ ev

**ஹைட்ராஜன் நிறமாலை**

1. லைமன் வரிசை (புற ஊதா பகுதி) $\bar{\upsilon} = \frac{1}{\lambda} = R\left(\frac{1}{1^2} - \frac{1}{m^2}\right)$ $n = 1,\ m = 2,3,4,.....$

2. பாமர் வரிசை (கண்ணுறு பகுதி) $\bar{\upsilon} = \frac{1}{\lambda} = R\left(\frac{1}{2^2} - \frac{1}{m^2}\right)$ $n = 2,\ m = 3,4,5,...$

3. பாஷன் வரிசை (அகச்சிவப்பிற்கு அருகில்) (near infrared)

   $\bar{\upsilon} = \frac{1}{\lambda} = R\left(\frac{1}{3^2} - \frac{1}{m^2}\right)$ $n = 3,\ m = 4,5,6,....$

4. பிராக்கெட் வரிசை (middle infra red) $\bar{\upsilon} = \frac{1}{\lambda} = R\left(\frac{1}{4^2} - \frac{1}{m^2}\right)$ $n = 4, m = 5,6,7,...$

5. ∴பண்ட் வரிசை (far infra red) $\bar{\upsilon} = \frac{1}{\lambda} = R\left(\frac{1}{5^2} - \frac{1}{m^2}\right)$ $n = 5,\ m = 6,7,8,...$

**அணுக்கருவின் கட்டமைப்பு**

$_zX^A$ என்பது தனிமத்தின் அணுக்கருவை குறிக்கிறது.

ஐசோடோப்புகள் - சமமான அணு எண் (z) மற்றும் வேறுபட்ட நிறை எண் கொண்ட ஒரே தனிமம்.

ஐசோபார்கள் - சமமான நிறை எண் (A) மற்றும் வேறுபட்ட அணு எண் கொண்ட வேறுப்பட்ட தனிமம்.

ஐசோடோன்கள் - சம எண்ணிக்கையில் நியூட்ரான்களை கொண்டுள்ள வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நிறை – ஆற்றல்**

1. நிறை வழு $(\Delta m)$

   $\Delta m =$ (நியூட்ரான் + புரோட்டான் - அணுக்கரு)வின் நிறை

   $\Delta m = Zm_p + Nm_n - M$

2. பிணைப்பு ஆற்றல் $(BE) = (Zm_p + Nm_n - M)c^2$

3. $1\ amu = 931\ Mev$

4. ஒரு நியூக்ளியானுக்கான சராசரி பிணைப்பாற்றல்

   $$\overline{BE} = \frac{[Zm_4 - Nm_n - M_A]c^2}{A}$$

**குறிப்புகள்**

1. நிறையெண்ணின் மதிப்பு கூட கூட $\overline{BE}$ – ன் மதிப்பு அதிகரித்து A = 56 எனும் போது பெரும மதிப்பு பெருகிறது (8.8 Mev)
2. நிறையென் A= 40 லிருந்து 120 வரை $\overline{BE}$ ன் சராசரி மதிப்பு 8.5 Mev
3. A < 28 கொண்ட இரு இலேசான அணுக்கருக்களை சேர்த்து A < 56 கொண்ட அணுக்கருவை உருவாக்கும் போது ஏராளமான ஆற்றல் உருவாகிறது (அணுக்கரு இணைவு)
4. கனமான தனிமத்தின் அணுக்கருவை பிளவு செய்து இரண்டு (அ) அதற்கு மேலான இடைநிலை A மதிப்புடைய அணுக்கருக்களை உருவாக்கும் போது ஏராளமான ஆற்றல் வெளிப்படுகிறது.

**கதிரியக்கம்**

ஒரு தனிமத்தில் இருந்து அதிக ஊடுருவுதிறன் கொண்ட கதிர்வீச்சுகளான $\alpha, \beta$ மற்றும் $\gamma$ கதிர்கள் தன்னிச்சையாக உமிழப்படும் நிகழ்வு கதிரியக்கம் எனப்படும்.

$\alpha$ துகள் He அணுக்கருவை போன்றது. $\beta^-$ துகள்கள் எலக்ட்ரான்கள் $\beta^+$ துகள்கள் பாசிட்ரான்கள், $\gamma$ – கதிர்கள் கிளர்ச்சியுற்ற அணுக்கருக்களால் உமிழப்படும் மின்காந்த கதிர்வீச்சாகும்.

$\alpha$ – சிதைவு $\ {}^{A}_{z}x \rightarrow {}^{A-4}_{z-2}Y + {}^{4}_{2}He$

$\beta^-$ – சிதைவு $\ n \rightarrow P + e^- + \overline{\upsilon}$

$\beta^+$ – சிதைவு $\ P \rightarrow n + e^+ + \upsilon$

காமா உமிழ்வு $\ {}_{z}X^{A*} \rightarrow {}_{z}X^{A}$ காமா கதிர்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**கதிரியக்க சிதைவு விதி**

$N = N_0 e^{-\lambda t}$

$N_0$ – தொடக்கத்தில் உள்ள அணுக்கருக்களின் எண்ணிக்கை

$N$ – மீதமுள்ள அணுக்கருக்களின் எண்ணிக்கை

**அரை ஆயுட்காலம்** $(T_{1/2})$

$$T_{1/2} = \frac{0.6931}{\lambda}$$

தொடக்க அணுக்கருக்களின் எண்ணிக்கையில் பாதியாக மாற எடுத்து கொள்ளும் காலம்.

**சராசரி ஆயுட்காலம்** $(\tau)$

$$\tau = \frac{1}{\lambda}$$

சராசரி ஆயுட்காலத்தை பயன்படுத்தி அரை ஆயுட்காலத்தை பின்வரும் முறையில் காணலாம்.

$$T_{1/2} = \tau \ln 2 = 0.6931\tau$$

**அணுக்கரு பிளவு**

நிலைத்தன்மையற்ற கனமான உட்கரு இரண்டு சிறிய அணுக்கருக்களாக பிரிகிறது

$${}_{92}U^{235} + {}_0 n^1 \rightarrow {}_{92} U^{236^*} \Rightarrow {}_{56} Ba^{141} + {}_{36} Kr^{92} + 3{}_0 n^1 + 200 Mev$$

**அணுக்கரு இணைவு**

- $4({}_1H^1) \rightarrow {}_2 He^4 + 2(\underset{+1}{e^0}) + 2\upsilon + 27 Mev$
- ஹைட்ரஜன் வெடித்தல்
- இதில் வெப்ப அணுக்கு ஆற்றல் வெளியிடபடுகிறது
- அணுக்கரு இணைவு அபாயகரமான கதிர்வீச்சை வெளியிடாது
- இணைவு வினைகளில் புரோட்டான்கள் தேவைப்படுகின்றன



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# வினாக்கள்

1. 12.5 Mev ஆற்றல் கொண்ட $\alpha$ துகள் ஒன்று தங்க அணுக்கருவை நெருங்கும் போது $\mu = \frac{\sin i}{\sin A}$ விலக்கப்படுகிறது. அணுக்கருவின் அணுகும் மீச்சிறு தொலைவு யாது?

   a) $1.8 \times 10^{-14}$m   b) $2.27 \times 10^{-14}$m   c) $18 \times 10^{-14}$m   d) $22.7 \times 10^{-14}$m

2. ஹைட்ரஜன் அணுவின் அடிநிலை ஆற்றல் -13.6ev இந்நிலையில் எலக்ட்ரானின் இயக்க ஆற்றல் யாது

   a) -27.2ev   b) +27.2ev   c) 13.6ev   d) -13.6ev

3. ஹைட்ரஜன் நிறமாலை வரிசையில் உள்ள அதிக அலைநீளமுள்ள லைமன் மற்றும் பால்மர் வரிசைகளுக்கு இடையேயுள்ள விகிதம்

   a) $\frac{7}{29}$   b) $\frac{5}{27}$   c) $\frac{27}{5}$   d) $\frac{5}{23}$

4. மூன்றுமுறை அயனியாக்கபட்ட பெரிலியத்தின் எந்நிலையானது ஹைட்ரஜன் அடிநிலைக்கு சமமான ஆரம் கொண்ட வட்டபாதையை பெற்றுள்ளது?

   a) n = 2   b) n = 1   c) n = 3   d) n = 4

5. ஒரு எலக்ட்ரானில் உள்ள அணு (அ) அயனியில் வட்டபாதையின் எண் அதிகரிக்க அதிகரிக்க அவற்றிற்கிடையேயான தொலைவு

   a) அதிகரிக்கும்   b) குறையும்
   c) மாறாது   d) முதலில் அதிகரித்து பின் மாறாமலிருக்கும்

6. போரின் எடுகோளின் படி, ஹைட்ரஜனின் 2ம் வட்ட பாதை எலக்ட்ரானின் கோண உந்தம்

